# மாகாணக் கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

புவியியல் I, II
Geography I, II

தரம் - 09

இரண்டு மணித்தியாலம்

சுட்டெண்:…………………………………

### பகுதி - I

❖ மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. ஆசியாக் கண்டத்தின் தென் எல்லையாக அமைந்துள்ள சமுத்திரம் எது?
   (1) ஆட்டிக் சமுத்திரம் (2) பசுபிக் சமுத்திரம்
   (3) இந்து சமுத்திரம் (4) அத்திலாந்திக் சமுத்திரம்

2. இமய மலைத்தொடரில் அமைந்துள்ள சிகரங்களில் மிக உயரமானது எது?
   (1) கன்சன்யுங்கா (2) எவரெஸ்ற் (3) மகாலு (4) தவளகிரி

3. கீழே நிரல் "அ" இல் ஆசியாவில் சனத்தொகை அடர்த்தி மிக்க நகரங்களும், நிரல் "ஆ" இல் அவை அமைந்துள்ள நாடுகளும் தரப்பட்டுள்ளன. நிரல் "அ" இற்கு ஏற்ப நிரல் "ஆ" இனைத் தொடர்புபடுத்திச் சரியான விடையினைத் தெரிவு செய்க.

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| 1. டோக்கியோ | A – இந்தியா |
| 2. பாங்கொங் | B – யப்பான் |
| 3. மும்பாய் | C – சீனா |
| 4. பீஜிங் | D – தாய்லாந்து |

   (1) BADC (2) BCAD (3) BDAC (4) BCDA

4. இலங்கையில் உள்ள சதுப்பு நிலங்களில் ஒன்று
   (1) ஆனை விழுந்தான் (2) வெலிகம (3) தெய்வேந்திரமுனை (4) கிரிந்த

5. விக்டோரியா மற்றும் கொத்மலை நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டுள்ள நதி எது?
   (1) கல் ஓயா (2) மகாவலி கங்கை (3) வளவை கங்கை (4) கலா ஓயா

6. மத்திய மலைநாட்டில் 1200 $m$ க்கு மேற்பட்ட உயரமுடைய மேற்குப் பிரதேசங்களில் பரந்துள்ள இயற்கைத்தாவர வகை யாது?
   (1) மலைநாட்டு உவர்வலயக் காடுகள் (2) அயன மழைக்காடுகள்
   (3) மலைநாட்டு ஈரவலயக் காடுகள் (4) என்றும் பசுமையான காடுகள்

7. இலங்கையில் அதிக சனத்தொகை கொண்ட மாகாணம் எது?
   (1) வட மாகாணம் (2) தென் மாகாணம் (3) கிழக்கு மாகாணம் (4) மேல் மாகாணம்

8. விவசாயம், மீன்பிடி முதலான முதல்நிலைப் பொருளாதாரச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட குடியிருப்பு வகை எது?
   (1) நகரக் குடியிருப்பு (2) கிராம – நகரக் குடியிருப்பு
   (3) கிராமக் குடியிருப்பு (4) பெரு நகரக் குடியிருப்பு

Past Papers Wiki



9. குறிப்பிட்ட காலப்பகுதியில் நாடொன்றில் வருமானமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட தனிநபர் ஒருவருக்கான பணத்தின் அளவு எவ்வாறு அழைக்கப்படும்?
   (1) தேசிய வருமானம் (2) தலா வருமானம்
   (3) மொத்த வருமானம் (4) தேறிய வருமானம்

10. தென்னாசிய நாடுகளுக்கிடையில் உயர் எழுத்தறிவு வீதத்தை கொண்ட நாடு எது?
   (1) இந்தியா (2) பங்களாதேஷ் (3) பாகிஸ்தான் (4) இலங்கை

11. குறிப்பிட்ட நாடொன்றின் சிசுமரண வீதத்திலிருந்து அறிந்து கொள்ளக் கூடிய விடயம் எது?
   (1) விளையாட்டு வசதிகளின் பரம்பல் (2) சுகாதார மற்றும் மருந்து வசதிகளின் சிறப்பு
   (3) ஓய்விற்கான வசதி வாய்ப்புக்கள் (4) பாடசாலை வசதிகளின் பரம்பல்

12. 2012 ஆம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டின் படி எழுத்தறிவு வீதம் உயர்வாகக் காணப்படும் மாவட்டம் எது?
   (1) யாழ்ப்பாணம் (2) கொழும்பு (3) இரத்தினபுரி (4) அநுராதபுரம்

13. பின்வருவனவற்றுள் உயிரற்ற கூறுகள் எவை?
   (1) தாவரங்கள், விலங்குகள் (2) நுண்ணங்கிகள், தரைதோற்றம்
   (3) வளி, நிலவுருவங்கள் (4) சூரிய ஒளி, தாவரங்கள்

14. கைத்தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட பாதக விளைவு
   (1) போக்குவரத்து விருத்தி (2) நவீன தொழில் நுட்ப வளர்ச்சி
   (3) தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டமை. (4) வளப்பற்றாக்குறை

15. பேண்தகு அபிவிருத்தி திட்டங்களைத் தயாரிக்கும் போது அதிகளவில் முக்கியத்துவம் பெறும் விடயம் எது?
   (1) வாழ்க்கைத்தர உயர்வு (2) பிரதேச அபிவிருத்தி
   (3) மக்களின் தேவைகள் (4) சூழல் சமநிலைப் பாதுகாப்பு

16. சர்வதேச ரீதியில் ஈரநிலங்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒப்பற்தம் எது?
   (1) ரம்சார் சமவாயம் (2) மொன்றியல் சமவாயம்
   (3) வியன்னா ஒப்பந்தம் (4) ஒட்டாவா ஒப்பந்தம்

17. இலங்கையின் 1:50,000 இடவிளக்கப்படங்களில் பௌதிக, பண்பாட்டு அம்சங்களை விளக்கிக் கொள்வதற்கு அவசியமானது?
   (1) அளவுத்திட்டம் (2) திசை (3) தலைப்பு (4) வழக்கக்குறியீடுகள்

18. பின்வருவனவற்றுள் பௌதிக அம்சங்களைக் கொண்ட சரியான விடைத்தொகுதி எது?
   (1) பிரதான வீதி, நகரசபை எல்லை
   (2) நீர்ப்பாசனக் கால்வாய், திரிகோணகணித நிலையம்
   (3) மேட்டுநிலம், சேற்றுநிலம்
   (4) வாடிவீடு, வெளிச்ச வீடு

19. மலைப்பிரதேசங்களில் பெருந்தெருக்களை அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் பௌதிக அம்சம் எது?
   (1) சமவெளிகள் (2) மலைச்சிகரங்கள்
   (3) வெளியரும்பிய பாறை (4) கணவாய்கள்

Past Papers Wiki



20. நிரல் "அ" இல் நிறங்களும், நிரல் "ஆ" இல் நிறங்களினால் குறித்துக் காட்டும் அம்சங்களும் தரப்பட்டுள்ளன. நிரல் "அ" இற்கு ஏற்ப நிரல் "ஆ" இனைத் தொடர்புபடுத்திச் சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| 1. ஊதா | A – வீட்டுத்தோட்டம் |
| 2. மஞ்சள் | B – நீதி மன்றம் |
| 3. சிவப்பு | C – சமவுயரக்கோடு |
| 4. கபிலம் | D – அதிவேகப்பாதை |

(1) CDAB (2) BACD (3) DABC (4) CABD

($2 \times 20 = 40$ புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. கீழே தரப்பட்டுள்ள ஆசியப்புறவுருவப்படத்தில் $A - L$ வரை குறித்துக் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து உமது விடைத்தாளில் அதே ஒழுங்கில் எழுதுக.
(பாக்குநீரிணை, நேபாளம், அரேபிய மேட்டுநிலம், பைக்கால் ஏரி, வங்காள விரிகுடா, இந்துநதி, யூரல் மலைத்தொடர், யப்பான் கடல், யாவாத்தீவு, மஞ்சூரியன் சமவெளி, கஸ்பியன் கடல், பிலிப்பைன்ஸ்)




($1 \times 12 = 12$ புள்ளிகள்)

2. இலங்கையின் 1:50,000 இடவிளக்கப்படங்களில் பயன்படுத்தப்படுகின்ற பண்பாட்டம்சங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை உரிய நிறங்களைப் பயன்படுத்தி வரைந்து காட்டுக.

| | |
|---|---|
| (i) மாவட்ட எல்லை | (iv) சிறுவீதி |
| (ii) வைத்தியசாலை | (v) புகையிரத நிலையம் |
| (iii) தெங்குச் செய்கை | (vi) நீர்பாசனக்கால்வாய் |

($2 \times 6 = 12$ புள்ளிகள்)

3. (i) ஆசியாக் கண்டத்தில் அதிக சனத்தொகை கொண்ட முதல் இரண்டு நாடுகளையும் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) ஆசியாக் கண்டத்தில் தோற்றம் பெற்ற புராதன நதிக் கரை நாகரிங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) உலகின் பிரதான காலநிலை வலயங்களினுள் உப காலநிலை வகைகள் நிலவுவதற்கான மூன்று காரணங்களை எழுதுக. (03 புள்ளிகள்)

(iv) ஆசியாவின் பிரதான கைத்தொழில் நாடாக யப்பான் முக்கியத்தவம் பெறுவதற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

4. (i) கரையோச் சமவெளியில் காணப்படும் நான்கு நிலவுருவங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii)(*a*) இலங்கையில் எச்சக்குன்றுகள் காணப்படும் தரைத்தோற்ற வலயம் எது? (01 புள்ளி)

(*b*) எச்சகுன்றுகளுக்கு இரண்டு உதாரணங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iii) இலங்கையில் பின்வரும் காலப்பகுதிகளில் கிடைக்கம் மழைவீழ்ச்சி முறைகளைப் பெயரிடுக.

(*a*) மார்ச் தொடக்கம் ஏப்பரல் - (*b*) டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி –

(*c*) நவம்பர் தொடக்கம் டிசம்பர் - (03 புள்ளிகள்)

(iv) கரையோரங்களில் ஆற்று முகத்துவாரப் பகுதிகள் மற்றும் கடனீரேரிகளில் காணப்படும் இயற்கைத் தாவர வகையை குறிப்பிட்டு, அத் தாவரங்களின் மூன்று பண்புகளை எழுதுக. (04 புள்ளிகள்)

5. (i) நகரக் குடியிருப்பின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையின் விவசாயத்துறையினுள் இடம்பெறும் மூன்று விவசாய நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையில் மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்ற வலுச்சக்தி மூலங்கள் மூன்றினைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iv) இலங்கை அரசினால் எழுத்தறிவு வீதத்தினை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நான்கு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

6. (i) மனிதன் பௌதிகச் சூழலைப் பயன்படுத்தும் இரண்டு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சூழல் சமநிலையின்மையை உருவாக்கும் மூன்று மனித நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) சூழல் சமநிலை சீர்குலைவதால் ஏற்படும் பாதிப்புக்கள் மூன்று குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iv) சூழல் சமநிலையைப் பேணுவதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi



Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library